**PW.1** விக்னேஷ்

10-03-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த இரண்டு வருடங்களாக பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்பும் ஒரு தனியார் நிறுவனத்தில் 4 அல்லது 5 வருடங்கள் பணிபுரிந்தேன். எனது தாயார் ஜீவனாம்சம் கேட்டு எனது தந்தைக்கு எதிராக மனு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த மனுவில் போட்ட உத்திரவின் அடிப்படையில் மாதம் ரூ.1000/- ஜீவனாம்சமாக பெற்று வந்தார். ஜீவனாம்ச மனு எண்.11/1999 மனு எண்ணில் எனது பெயரை விக்னேஷ்குமார் என்று எனது தாயார் போட்டுள்ளார் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. எனது பெயர் விக்னேஷ் ஆகும். நான் கூறுவது தவறு என்றும், எனது பெயர் விக்னேஷ்குமார்தான் என்றும், பின்னிட்டு நான் விக்னேஷ் என்று மாற்றி கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை இறக்கும்வரை எனது தாயாருக்கு மாதாமாதம் ஜீவனாம்சம் வரும். அது நீதிமன்றத்தின் மூலமாக வந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் மற்றும் எனது பெற்றோர்கள் சுமூகமாக இல்லை என்றும், அதனால்தான் எனது தாயார் நீதிமன்றத்தை நாடி, நீதிமன்றத்தின் உத்திரவின் அடிப்படையில் ஜீவனாம்சம் பெற்று வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

2009 ல் எனது தந்தை பொள்ளாச்சி R.I. ஆக பணிபுரிந்து வந்தார். அப்போது நான் டிப்ளமோ படித்து கொண்டிருந்தேன். 2009 ல் எனது தந்தை உதவியாளராகத்தான் இருந்தார் என்றும், R.I ஆக இருந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரின் கையொப்பம் எனக்கு தெரியும். எனது தந்தை தேர்வுநிலை உதவியாளராகத்தான் 2009 ல் இருந்தார் என்றும், ஆனால் நான் தவறாக அவர் R.I ஆக இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி தெரியாது. பொள்ளாச்சியில் எத்தனை வருடங்கள் பணிபுரிந்தார் என்று எனக்கு தெரியாது. பொள்ளாச்சியில் எங்கு குடியிருந்தார் என்றும் எனக்கு தெரியாது. அதன்பின்பு மதுக்கரையில் தாசில்தாராக ஒரு வருடம் இருந்தார். எந்த வருடம் என்று சரியாக நினைவில்லை. 2014 ஆக இருக்கலாம். அதற்கு இடையில் எங்கு, எங்கு வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் எனக்கும், எனது தந்தைக்கும் பேச்சுவார்த்தை இல்லையென்று சொன்னால், சரியல்ல, போன்மூலம் பேசி கொள்வோம். போன் மூலமாக பேசி கொண்டிருந்த நான் அவர் எங்கு வேலை செய்தார் என்று தெரியாது என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை கடைசியாக எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார் என்று எனக்கு தெரியாது. எனது தந்தையிடம் நான் அவரது மொபைல் எண்ணிற்கு ( 9442223195) தான் தொடர்பு கொண்டு பேசுவேன். எந்த வருடத்திலிருந்து அந்த எண்ணில் நான் பேசி வந்தேன் என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. ஆனால் 2002 அல்லது 2003 ஆக இருக்கலாம். 2002 அல்லது 2003 ல் எனது தகப்பனாரிடம் செல்போனே இல்லை என்றும் 2005 ல்தான் அவர் வாங்கினார் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி ஞாபகமில்லை. எனது தந்தை கோயமுத்தூருக்கு எப்பொழுது குடி வந்தார் என்று

எனக்கு தெரியாது. நான் எனது முதல் சாட்சியத்தில் எனது பெற்றோரின் விவாகரத்திற்கு பின்னர் எனது தந்தை முதல் பிரதிவாதியை திருமணம் செய்த விவரம் எனது தந்தையின் நண்பர் கூறிதான் தெரியும் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் கூறுவது போல் எனது தந்தையோடு நான் இணக்கமாக இருந்திருந்தால் தனது திருமணத்தை பற்றி என்னிடம் நேரடியாக கூறியிருப்பார் என்றும், இணக்கமாக இல்லாததினால்தான் நண்பர் கூறி தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. சேரன் டவரில் இருந்த காலேஜ் கலெக்ஷன் என்ற கடையில் எனது தந்தை என்னை அழைத்து சென்று துணிமணிகளை வாங்கி கொடுப்பார். அந்த கடை தரைத்தளத்தில் இருக்கும். தரைதளத்தில் எந்த இடத்தில் அமைந்திருந்தது என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. எனது தந்தையுடன் உண்மையில் நான் கடைக்கு சென்றிருந்தால் அது எந்த இடத்தில் இருந்தது என்று நான் சரியாக கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. காரணம் நான் இரண்டு முறை சேரன் டவரில் இருந்த காலேஜ் கலெக்ஷனுக்கு எனது தந்தையுடன் சென்றேன். பின்னர் அந்த கடை கிராஸ்கட் ரோட்டில் லட்சுமி காம்ப்ளக்ஸுக்கு எதிரில் மாற்றப்பட்டது. ஆனால் இந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

எனது திருமணம் 2014 ல் நடைபெற்றது. இந்த திருமணத்திற்கு எனது தந்தையை நான் அழைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அழைத்தேன், எனது தந்தை வரவில்லை. எங்களுக்குள் சுமூகமான உறவு இல்லை என்பதால்தான் எனது தந்தை எனது திருமணத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2010 ல் எனது தந்தைவழி பாட்டி காலமாகி விட்டார். கோவையில் உள்ள ராமநாதபுரம் பகுதியில்

வாழ்ந்தார். நான் கூறுவது தவறு என்றும், எனது பாட்டி 2009 ல் காலமானார் என்று சொன்னால், எனக்கு வருடம் சரியாக நினைவில்லை. எனது தந்தைவழி தாத்தா 2018 ல் காலமானார். அவர் 2016 ல் காலமானார் என்று சொன்னால் எனக்கு வருடம் சரியாக நினைவில்லை.

எனது பாட்டி இறப்பிற்கு நான் செல்லவில்லை. காரணம் அப்போது எனக்கு அம்மை போட்டிருந்தது, அதனால் செல்லவில்லை. ஒரு வாரத்திற்கு பின்பு சென்று பார்த்தேன். எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் எப்பொழுது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று சொன்னால், 2014 அல்லது 2018 ஆக இருக்கலாம். வருடம் சரியாக எனக்கு நினைவில்லை. அவருக்கு சர்க்கரை நோய் அதிகமாக இருந்து கால் விரல்கள் அகற்றப்பட்டது. குப்புசாமி நாயுடு மருத்துவமனையில்தான் அனுமதிக்கப்பட்டிருந்தார். எந்த பிளாக்கில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. இந்த விவரங்கள் அனைத்தும் எனது தந்தை இறந்த பிறகுதான் நான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா உயிரோடு இருக்கும்போதே எனக்கு தெரியும். மருத்துவமனையில் நான் எனது தந்தையை சென்று பார்த்தேன். அப்பொழுது மருத்துவமனையில் 1 ஆம் பிரதிவாதிதான் உடன் இருந்து கவனித்து கொண்டார் என்று சொன்னால், நான் 1 ஆம் பிரதிவாதியை மருத்துவமனையில் பார்க்கவில்லை. நான் மருத்துவமனைக்கு சென்ற சமயத்தில் எனது தந்தையின் பெரிய சகோதரி பரிமளா மருத்துவமனையில் இருந்து அவரை பார்த்து வந்தார். அவர் 40 நாட்களுக்குள் மேலாக மருத்துவமனையில் இருந்தார். அவர் 40 நாட்கள் தொடர்ந்து மருத்துவமனையில் இல்லை. இடையிடையே மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டு பார்த்து வந்தார். ஆனால் அந்த தேதிகள் தற்போது எனக்கு நினைவில்லை.

**( நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )**

sd/ விக்னேஷ்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.